# பதிற்றுப்பத்து

**முன்னுரை :**

நாட்டில் வாழும் உயிர்கள் இன்புற்று வாழ வேண்டும். அவ்வாழ்வு சிறந்த நாட்டின் அரசன் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். வள்ளுவர் "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு" என்று குறிப்பிடுகிறார். பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு" என்று அறிவுறுத்துகிறார் .அத்தகைய சிறப்புமிக்க நாடுதான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் நாடாகும்.

**ஆசிரியர் குறிப்பு :**

சேரலாதனின் நாடு காத்தற் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் தம்முடைய பாடலில் புகழ்ந்துள்ளார். குமட்டூர்க் கண்ணனார் உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றார் .

**நூற் குறிப்பு :**

எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் இது பாடாண் திணையில் அமைந்துள்ளது. முதல் பத்துப் பாடல்களும், இறுதிப் பத்துப்பாடல்களும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன ; பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் அப்பாடலுக்குத் தலைப்பாக தரப்பட்டிருக்கிறது. பாடப் பகுதிப் பாடலுக்குச் சேரலாதனின் படைவீரர் பகைவர் முன் நிரையபாலரைப் போலப் (நரகத்துவீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் நிறைய வெள்ளம் என்று தலைப்பிடப்பட்டுள்ளது.பாடப் பகுதியானஇரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன்இமயவரம்பன்நெடுஞ்சேரலாதன் ஆவான்.

**பாட**ல்:

பதி பிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கை புரையோர்
மேயினர் உறையும் பலர் புகழ் பண்பின்

நீ புறந்தருதலின் நோய் இகந்து ஒரீஇய
யாணர் நன் நாடும் கண்டு மதி மருண்டனென்
மண் உடை ஞாலத்து மன் உயிர்க்கு எஞ்சாது
ஈத்து கை தண்டா கை கடும் துப்பின்
புரை_வயின் புரை_வயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர் கெழு விழவின்
நெடியோன் அன்ன நல் இசை
ஒடியா மைந்த நின் பண்பு பல நயந்தே

**பாடாண் திணை:**

பாடு + ஆண் + திணை= பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது. அதாவது ஒரு சிறந்த தலைவனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலிய பண்புகளை ஆராய்ந்து கூறுவதாகும்.

**துறை: செந்துறைப் பாடாண் பாட்டு**

உலகினுள் இயற்கை விசையால் இயன்ற மக்களைப் பாடுதல் செந்துறையாகும்.இவ்வகையில், அமைந்த பாடல் செந்துறைப் பாடாண்பாட்டுத் துறை ஆகும்.

**வண்ணம்:** வண்ணம் என்பது, சந்த (ஓசை நய) வேறுபாடாகும்.

**ஒழுகு வண்ணம்**: ஒழுகு வண்ணம்’ என்பது, ஒழுகிய (நெகிழ்ந்த) ஓசையால் சொல்லுதலாகும்.

**தூக்கு: செந்தூக்கு**

தூக்கு’ என்பது, செய்யுள் அடி அளவை வரையறை செய்வதாகும். செந்தூக்கு’ என்பது, வஞ்சிப்பாவின் இறுதி அடி போன்றோ, ஆசிரியப்பா அடியின் இறுதி போன்றோ அமைவதாகும்.

**பாடலின் பொருள்:**

சேரலாதனை உன் குடிமக்கள் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து வருபவர்கள். பசி, பிணி அறியாதவர்கள் நாட்டைவிட்டு புலம்பெயர்

உள்நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ விரும்புவர். அவ்வாறான குடிமக்களால் நீ போற்றப்படுகிறார். உலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவனே. நீ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குவாய். எப்பொழுதும் விழாக்கள் நிகழும் நாட்டிற்கு நீ உரிமை உடையவன். நெடியோன் போன்ற புகழை உடைய உன் நாட்டின் வளத்தையும் பகை நாட்டின் அழிவையும் கண்டு வியக்கிறேன்.

சேர நாடு செல்வ வளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெக் காத்தான். ஆகவே தான் அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பம் உடையவன் சேரலாதன்.